**சியம்பலாண்டுவ பிரதேச சபை - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சியம்பலாண்டுவ பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1)ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சியம்பலாண்டுவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற

பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்களை சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று, பிரதேச அபிவிருத்தி உதவித் திட்டத்துடன் தொடர்பான பேரேட்டுக் கணக்குகளின்படி, பண இருப்பு மற்றும் செலுத்த வேண்டிய இருப்பு காணப்படாத போதிலும் நிதிக் கூற்றுகளில், பண இருப்பு மற்றும் செலுத்த வேண்டிய இருப்பாக ரூபா 3,953,604 காட்டப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுகளை தயாரிக்கும் பொழுது சரிசெய்வதாக உறுதியளிக்கிறேன. | சரியான முறையில் நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) பொது வைப்புக் கணக்குப் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர்31 ஆம் திகயின்படி செலுத்த வேண்டிய முத்திரை வரி ரூபா. 170,198 என்ற போதிலும் அது நிதிக் கூற்றுக்களில் சேர்க்கப்படவில்லை. | 2024 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுகளை தயாரிக்கும் பொழுது சரிசெய்வதாக உறுதியளிக்கிறேன் | சரியான முறையில் நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியின் இருப்புப் பதிவேட்டின்படி, மீதமுள்ள தெரு விளக்குகளின் மதிப்பு ரூபா. 310,174 என்ற போதிலும் நிதிக்கூற்றுகளில் இது ரூபா. 543,172 என்பதாக ரூபா. 232,998 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுகளை தயாரிக்கும் பொழுது சரிசெய்வதாக உறுதியளிக்கிறேன் | இருப்பு சரியான முறையில் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் பூரணப்படுத்தப்பட்ட ரூபா. 3,562,734 பெறுமதியான 05 தொழிற்சாலைகளின் மதிப்பு நிதிக் கூற்றுக்களின் நிலம் மற்றும் கட்டிடங்கள் பகுதியின் கீழ் கணக்கில் வரவு வைக்கப்படவில்லை என்பதோடு முன்னைய ஆண்டுகள் மற்றும் மதிப்பாய்வு ஆண்டில் பூரணப்படுத்தப்பட்ட ரூபா. 54,717,294 பெறுமதியான 02 தொழிற்சாலைகளின் மதிப்பு நிதிக் கூற்றுக்களின் நிலம் மற்றும் கட்டிடங்கள் பிரிவில் ரூபா. 58,413,924 என்பதாக ரூபா. 3,696,630 அதிகமாகக் கணக்கில் குறிப்பிடப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுகளை தயாரிக்கும் பொழுது சரிசெய்வதாக உறுதியளிக்கிறேன் | சரியான முறையில் நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா. 164,925 மதிப்புள்ள 05 உபகரணங்கள் நிலையான சொத்துகளின் கீழ் பதிவுசெய்யப்படவில்லை. | இனிவரும் காலங்களில் இந்த குறைபாடுகளை சரி செய்வதற்கான உபதேசங்கள் விடயத்துக்குப் பொறுப்பான அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. | சரியான முறையில் நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | பிரதேச சபைக்கு சொந்தமான 3 நிலையங்களுக்கான மின்சார இணைப்பினை பெற்றுக்கொள்வதற்காக செலவிடப்பட்ட ரூபா. 155,307 நிலம் மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்கில் வரவுவைக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் இந்த குறைபாடுகளை சரி செய்வதற்கான உபதேசங்கள் விடயத்துக்குப் பொறுப்பான அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. | சரியான முறையில் நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (எ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட பெறுமதியான மர தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா. 2,718,780 என்றபோதிலும் அது மர தளபாடங்களின் கீழ் ரூபா. 2,888,460 என்பதாக ரூபா. 169,680 அதிகமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இனிவரும் காலங்களில் இந்த குறைபாடுகளை சரி செய்வதற்கான உபதேசங்கள் விடயத்துக்குப் பொறுப்பான அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. | சரியான முறையில் நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஏ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா. 2,590,000, பெறுமதியான ப்ரேலர் இயந்திரத்தின் மதிப்பு இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் ரூ. 2,500,000 என்பதாக ரூபா. 90,000 குறைவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுகளை தயாரிக்கும் பொழுது சரிசெய்வதாக உறுதியளிக்கிறேன் | சரியான பெறுமதி நிதிக் கூற்றுகளில் உள்ளிடப்பட வேண்டும் |
| (ஐ) மீளாய்வாண்டில் நன்கொடையாகப் கிடைக்கப்பெற்ற 02 பிளாஸ்டிக் தண்ணீர் தொட்டிகள் மற்றும் ஒரு Tab உகரணம் ஆகியவற்றின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுகளைத் தயாரிக்கும் பொழுது சரிசெய்வதாக உறுதியளிக்கிறேன் | சபைக்குச் சொந்தமான சொத்துக்களின் பெறுமதி சரியான முறையில் கணக்கில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ஒ) மீளாய்வாண்டிற்கான வாராந்த சந்தை தாமத அபராதக் கட்டணங்களின் பெறுமதி ரூபா. 234,868 என்றபோதிலும் நிதிக்கூற்றுகளில் அது ரூபா. 134,868 என்பதாக ரூபா. 100,000 குறைவாகக் குறிப்பிடப்பிடப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுகளை தயாரிக்கும் பொழுது சரிசெய்வதாக உறுதியளிக்கிறேன் | சரியான பெறுமதி நிதிக் கூற்றுகளில் உள்ளிடப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஔ) பிரதேச அபிவிருத்தி உதவித் திட்டத்திற்காக மீளாய்வாண்டில் ரூபா. 26,665,930 கிடைக்கப்பெற்றதோடு இதில் மூலதனச் செலவாக ரூபா. 25,282,600 மற்றும் நடைமுறைச் செலவாக ரூபா. 1,383,330 செலவிடப்பட்டிருந்தது. இந்த பரிவர்த்தனைகள் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுகளை தயாரிக்கும் பொழுது சரிசெய்வதாக உறுதியளிக்கிறேன் | சரியான முறையில் நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

## 1.6.2 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 141,107,722 கூட்டுப்பெறுமதியான 03 சொத்து விடயங்கள் தொடர்பாக தொழில்சார் மதிப்பீட்டாளரின் அறிக்கைகள் உரிமைப் பத்திரம், மற்றும் இற்றைப்படுத்தப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு, நிலுவையில் உள்ள வாராந்த சந்தை வரி நிலுவைப் பதிவு மற்றும் வைப்புப் பதிவேடு என்பன சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது. | சபைக்கு சொந்தமான காணிகளை மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், அவசியமான பிரதான மற்றும் உப ஆவணங்களை இற்றைப்படுத்த அவசியமான ஆலோசனைகள் பொறுப்பான அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. | நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்ட கணக்கு மீதிகளை உறுதிப்படுத்து வதற்காக பிரதான மற்றும் உப ஆவணங்களை இற்றைப்படுத்தி பயன்படுத்த வேண்டும் |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணக்கமின்மை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றம் முகாமைத்துவ தீர்மானங்ளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| இலங்கை சனநாயக சேதாஸலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| நி.பி 104(4) | 2023 திசெம்பர் 15 அன்று, விபத்துகள் நிகழ்ந்து 02 மாதங்கள் முதல் 36 மாதங்கள் வரை கடந்துவிட்ட நிலையிலும், 03 வாகனங்களுடன் தொடர்பான 04 விபத்துக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணங்களிற்கு ஏற்ப முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. | இந்த விபத்துகள் தொடர்பான முதற்கட்ட அறிக்கைகள் உள்ளூராட்சித் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், அனுமதி கிடைத்தவுடன் பூரன அறிக்கைகளை அனுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | குறிப்பிடப்பட்ட நிதிப் பிரமாணங்களிற்கு ஏற்ப செயற்பட வேண்டும் |
| (ஆ)2009 ஏப்ரல் 16 ஆம் திகதியுடைய 09/2009 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் 02(IV) ஆம் பிரிவு | 2023 ஜனவரி முதல் நவம்பர் வரை, மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் விடுமுறை ஊதியக் கொடுப்பனவாக ரூபா. 879,985 செலுத்தப்பட்ட போதிலும், வருகை மற்றும் புறப்பாடு ஆகியன கைரேகை இயந்திர அறிக்கைகளால் உறுதிப்படுத்தப்படவில்லை. | .கடந்த 2003 ஆம் ஆண்டு கைரேகை இயந்திரம் செயலிழந்ததால் இந்த நிலை ஏற்பட்டது. மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் விடுமுறை ஊதியம் வழங்கும் போது அதிகாரிகளினால் கையொப்பப் புத்தகம் சரிபார்க்கப்பட்டு கண்காணிப்பு அலுவலர்களின் பரிந்துரையின் அடிப்படையில் பணம் செலுத்தப்பட்டது. | பொருத்தமான சுற்றறிக்கைகளுக்கு ஏற்ப செயற்பட வேண்டும் |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,313,737ஆக இருந்ததுடன் அதனேடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 943,464 ஆக காணப்பட்டது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபையின் செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதான மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்ப ட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 30,340 | - | - | - | 5,000 | - | - | - |
| (ii) | வாடகை | 25,536,256 | 21,701,665 | 21,705,990 | (4,325) | 12,897,775 | 12,335,379 | 11,660,769 | 674,610 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 1,960,400 | 1,225,800 | 1,221,100 | 4,700 | 1,830,200 | 1,052,600 | 1,037,600 | 15,000 |
| (iv) | ஏனைய வருமானம் | 13,760,187 | 10,321,420 | 6,527,518 | 3,763,902 | 16,916,814 | 10,425,389 | 7,933,204 | 2,492,185 |
| | மொத்தம் | 41,287,183 | 33,248,885 | 29,454,608 | 3,764,277 | 31,649,789 | 23,813,368 | 20,631,573 | 3,181,795 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **வீதவரியும் வரியும்** | | |
| முன்னைய ஆண்டுகளில் சபையின் சொத்துகளை குத்தகைக்கு வழங்கியதற்காக அறவிடப்பட வேண்டிய வருமானமான ரூபா. 5,495,856 அறவிப்பட்டிருக்கவில்லை | கொரோனா தொற்று காரணமாக வாராந்த சந்தையை நடாத்திச்செல்ல முடியா நிலைமை ஏற்பட்டதைக் கருத்ததிற் கொண்டு இவ்வருமானத்தை வருமான ஏடுகளிலிளிருந்து நீக்குவதற்கான அகுமதி கோரல் கௌரவ ஆளுநருக்கு அனுப்பப்பட்டுள்ளது. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும் |
| **குத்தகை** | | |
| மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட ரூபா. 1,355,400 ஆன குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த கடைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய வருமானத்தில் ரூபா. 28,400 உம், முன்னைய ஆண்டுகளில் பட்டியலிடப்பட்ட குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த கடைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய வருமானத்தில் ரூபா. 107,650 உம், 2023 திசெம்பர் 31 அன்று வரை அறவிடப்பட்டிருக்கவில்லை | இந் நிலுவைத் தொகையை அறவிடுதல் தொடர்பில் குத்தகைதாரர்களை அறிவுறுத்தியுள்ளமையை தெரிவித்துக்கொள்கிறேன் | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும் |
| **வியாபார அனுமதிப்பத்தரக் கட்டணம்** | | |
| _2023 திசெம்பர் 15 இல் உள்ளவாறு பிரதேச சபைக்கு சொந்தமான 57 கடைகள் வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன. எனினும் அந்தக் கடைகளுக்கு வியாபார வரி, தொழிற்சாலை வரி அல்லது வர்த்தக அனுமதிக்கத்திரக் கட்டணம் போன்ற எதுவும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | உரிய கட்டணத்தை அறவீடு செய்ய வருமானப் பரிசோதகருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | சபைக்கு கிடைக்க வேண்டிய வரிகள் மற்றும் கட்டணங்கள் வசூலிக்கப்பட வேண்டும். |

**<u>ஏனைய வருமானங்கள்</u>**

| | | |
|---|---|---|
| (அ) 2023 ஆம் ஆண்டு அடையாளங் காணப்பட்ட 126 விளம்பரப் பலகைகளிற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா. 599,565 பெறுமதியாக விளம்பரப் பலகைக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | உரிய நிலுவைக் கட்டணத்தை அறவீடு செய்ய வருமானப் பரிசோதகருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | வருமான நிலுவை அறவிடப்பட வேண்டும் |
| (ஆ) மீளாய்வாண்டில் நிலுவையாகக் காணப்படும் 131 வாடிக்கையாளர்களின் ரூபா. 173,119 பெறுமதியான நீர் கட்டணம் 2023 திசெம்பர் 31 வரையில் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவையாகவுள்ள நீர் கட்டணத்தை அறவீடு செய்ய தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | வருமான நிலுவை அறவிடப்பட வேண்டும் |
| (இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்கு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 272,500 இனையும், முத்திரைக் கட்டணங்கள் ரூபா 4,770,082 இனையும் சபைக்கு கொண்டுவருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | இந் நிலுவை வருமானத்தை அறவீடு செய்ய தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன | வருமான நிலுவை அறவிடப்பட வேண்டும் |

## 3. <u>செயற்பாட்டு மீளாய்வு</u>

### 3.1 <u>சட்டத்தால் கையளிக்கப்படுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றல்</u>

பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ், பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் ஆகிய விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல் மற்றும் பொதுமக்கள் நலன், வசதிகள் மற்றும் நலனபுரி சேவைகள் போன்ற சபையால் ஆற்றப்பட வேண்டிய கடமைகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (i) பிரதேச சபை மூலம் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அனுமதிகளைப் பெற வேண்டிய தொழிற்துறைகளை அடையாளம் காண 2023 ஆம் ஆண்டில் எவ்வித கணக்கெடுப்பும் மேற்கொள்ளப்படவில்லை. | 2022 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட கணக்கெடுப்பினை அடிப்படையாகக் கொண்டு 2023 ஆம் ஆண்டின் சுற்றுறாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட்டுள்ளது. | சபையினால் தம் ஆளுகைக்குட்பட்ட பகுதியில் தற்பொழுது காணப்படும் தொழிற்சாலைகளை கண்கானிக்க வேண்டும். |
| (ii) சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரங்களின் செல்லுபடியாகும் காலம் முடிவடைந்த 08 தொழிற்சாலைகளுக்கு மீண்டும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் மீளப் பெறப்படவில்லை. | இத் தொழிற்சாலைகளுக்கான சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | தம் ஆளுகைக்குட்பட்ட பகுதியில் தற்பொழுது காணப்படும் தொழிற்சாலைகளை சபை கண்கானிக்க வேண்டும். |

**(ஆ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| I. 2022 நவம்பர் 18, ம் திகதிய 2307 ம் இலக்க வர்த்தமானி ஊடாக கழிவு சுத்திகரிப்புக்கான துணை விதிகளின் பிரகாரம் கழிவு சேகரிப்புக்கென சபை கட்டணம் வசூலிக்க வேண்டும் என்று கூறப்பட்ட போதிலும், 2023 ஆம் ஆண்டில் கழிவுகளுக்கு கட்டணம் வசூலிக்கப்பட வேண்டிய நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டு அதற்கான கட்டணம் வசூலிக்கப்படவில்லை. | 2024 ம் ஆண்டில் இவ் விடயம் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் | சட்ட விதிகளின்படி அதற்கான கட்டணங்கள் வசூலிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| II. 2022 நவம்பர் 18 ஆம் திகதிய வர்த்தமானி இலக்கம் 2307 பிரகாரம் ,முச்சக்கர வண்டித் தரிப்பிடங்களில் காணப்படும் முச்சக்கர வண்டிகளைப் பதிவு செய்வதற்கு ரூபா. 5,000 மற்றும் மாதாந்தக் கட்டணமாக ரூபா. 150 வசூலிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், சபை முச்சக்கர வண்டி நிறுத்தங்களுக்கான உப விதிகளை தயாரிக்கவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. | இது தொடர்பாக, எதிர்காலத்தில் முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | ஒரு துணைச் சட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

**(இ) <u>நீர் வழங்கல் செயற்றிட்டம்</u>**

| | | |
|---|---|---|
| சபையினால் பராமரிக்கப்படும் தெமட்டபெத்த நீர்வழங்கல திட்டத்தினால் பெறப்படும் நீர் குடிப்பதற்கு ஏற்ற நிலையில் உள்ளதா என்பதை உறுதிப்படுத்த நீர் மாதிரி பரிசோதனையொன்று மேற்கொள்ளப்படவில்லை. | நீர் மாதிரிகள் தர பரிசோதனைக்கு அனுப்பப்பட்டு உடனடியாக அறிக்கைகள் பெறப்படும். | சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதியில் காணப்படும் மக்களின் சுகாதாரம் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். |

## 3.2 <u>முகாமைத்துவ செயற்திறனின்மை</u>

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ)உத்தியோகத்தர்களின் செயற்றிறன் அற்ற தன்மை, அலட்சியம் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட நடைமுறைகளை பின்பற்றாமை என்பவற்றின் காரணமாக பிரதேச சபைக்குச் சொந்தமான 02 வாகன விபத்துக்களிற்காகக் கிடைக்க வேண்டிய ரூபா 474,578 காப்புறுதி இழப்பீடு இன்னும் 2023 திசெம்பர் 15 வரை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | இப்பிரச்னைக்கு தீர்வு காண தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | உரிய இழப்பை காப்புறுதி நிறுவனங்கள் மற்றும் பொறுப்பான தரப்பினரிடம் இருந்து வசூலிக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) பிரதேச சபைக்குச் சொந்தமான பெகோ லோடர் இயந்திரம் 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் 8 ஆம் தேதி விபத்தில் சிக்கியபோதிலும் 2023 திசெம்பர் 15 வரை அது பழுதுபார்க்கப்படவில்லை என்பதோடு காப்பீட்டு இழப்பீடும் பெறப்படவில்லை. | நாட்டில் ஏற்பட்ட கொரோனா தொற்று நிலைமை காரணமாக இந்த திருத்த வேலைகள் தாமதமான நிலையில் தற்போது அதற்கான விலைமனுக்கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்டு மாகாண இயந்திரவியல் பணிப்பாளரிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | இயந்திரத்தின் திருத்தப் பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.3 செயற்பாட்டு வினைத்திறன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சியம்பலாண்டுவ சந்தை வளாகத்தில் அமைந்துள்ள இரண்டு மாடி கட்டத் தொகுதியில் அமைந்துள்ள 10 கடை அறைகள் 2017 ஆம் ஆண்டிலிருந்து குத்தகைக்கு வழங்கப்படவில்லை. | இந்தக் கடைகளிற்கான விலைமனுக்கள் கோரப்பட்ட போதிலும் அந்தக் கடைகளைப் பெற எவரும் முன்வரவில்லை. | சபைக்கு சொந்தமான கடைகளை குத்தகைக்கு விடுவதனூடான குத்தகை வருமானத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். |
| (ஆ) பிரதேச சபைக்கு சொந்தமான சியம்பலாண்டுவ வாராந்த சந்தை வளாகத்தில் அமைந்துள்ள உள்ள 03 ஆம் இலக்கக் கடை ரூபா. 117,450 ரூபாய் எனும் ஆரம்பத் தொகைக்கு 2021 ஆம் ஆண்டு ஒக்டோபர் 6 ஆம் திகதி முதல் 03 வருட காலத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டதோடு குறித்த அத் தொகையை 11 மாதாந்த தவணைகளில் மீளப்பெறுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2023 மார்ச் 27, அன்று குறித்த குத்தகைதாரர் கடையை சபைக்கு மீள ஒப்படைத்தபோதிலும் ஆரம்பத் தொகையில் ரூபா. 96,102 அறவிடப்பட வேண்டி உள்ளது. | நிலுவைத் தொகையை வசூலிப்பதற்காக சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எழுத்துப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவைத் தொகையை வசூலிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) சபையில் பணியாற்றிய 03 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ஊழியர் கடன் ரூபா. 168,378 வருடத்திற்கும் மேலாக அறவிடப்படாது காணப்பட்டது | நிலுவையில் உள்ள கடன் பாக்கிகள் உடனடியாக வசூலிக்கப்படும். | ஊழியர் கடன் நிலுவைகள் உடனடியாக வசூலிக்கப்பட வேண்டும |

.

## 3.4 <u>சொத்துக்கள் முகாமைத்துவம்</u>

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபையினால் பயன்படுத்தப்படும் 02 வாகனங்களின் சட்டப்பூர்வ உரிமை சபைக்கு கையகப்படுத்தப்படவில்லை. | இக் குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்படும். | வாகனங்களின் சட்டப்பூர்வ உரிமை கையகப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) சபைக்குச் சொந்தமான 02 வண்டிகளின் இயந்திர இலக்கங்கள், மற்றொரு வாகனத்தின் செஸி இலக்கம் என்பன வாகனப் பதிவுச் சான்றிதழில் காணப்படும் இயந்திர இலக்கம் மற்றும் செஸி இலக்கம் என்பவற்றுடன் பொருந்தாமை அவதானிக்கப்பட்டது. | இக் குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | சபைக்கு சொந்தமான சொத்துக்களின் உரிமை மற்றும் பாதுகாப்பு குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும. |
| (இ) சபைக்குச் சொந்தமான 02 டிரக்டர் வாண்டிகளின் தூரமானிகள் செயலிழந்து காணப்பட்ட நிலையில் அவற்றை பழுதுபார்க்காது கடமைப்பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது | .அத்தியாவசிய சேவைகளை முன்னெடுப்பதற்காக இந்த 2 வாகனங்களும் தொழிநுட்ப உத்தியோகத்தர்களின் பூரண மேற்பார்வையின் கீழ் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன், இப்பிரச்சினைக்கு உடனடி தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும். | சபைக்கு சொந்தமான வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் அவசியமான உரிய வேளையின் போது பழுதுபார்க்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஈ) சபைக்கு சொந்தமான தண்ணீர் பவுசரின் மைலோமானியில் மொத்த பிரயாணத் தூரம் 2968 கிலோமீட்டர் என் றபோதிலும் நாளாந்த ஓட்டப் பதிவு புத்தகத்தின்படி, இது 2849 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. நாளாந்த ஓட்டப் பதிவு புத்தகத்தின் பிரகாரம் மைலோமானியில் குறிப்பிடப்படும் தூரத்தை விட 119 கிலோமீட்டர் அதிகமாக ஓட்டப்பட்டுள்ளது. | இது தொடர்பாக, ஓட்டுநருக்கு எச்சரிக்கை கடிதங்கள் வழங்கப்பட்டு அதற்குறிய காரணங்கள் கேட்கப்பட்டுள்ளதோடு, வாகனங்களின் தூரமானி மற்றும் ஓட்டுநர் பதிவு புத்தகங்களை மாதந்தோறும் பரிசீலிக்க பொறுப்பான அலுவலருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது | சபையின் வாகனங்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும் செயற்பாடு முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) முன்னைய ஆண்டுகளில் 04 நூலகங்களின் ரூபா. 128,184 பெறுமதியான 562 நூலகப் புத்தகங்கள் வாசகர்களுக்கு வழங்கப்பட்டிருந்த நிலையில் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் திசெம்பர் 31 வரை அவை மீள திருப்பி ஒப்படைக்கப்படவில்லை. | அந்த நிலுவைத் தொகையை வசூலிக்க விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும். | வாசகர்களுக்கு வழங்கப்பட்ட புத்தகங்களை மீளப்பெற வேண்டும். |

### 3.5 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சியம்பலாண்டுவ பிரதேச சபைக்கு சொந்தமான குத்தகை சொத்துக்களை குத்தகைக்கு வழங்குவதற்காக 2022 ஒக்டோபர் 10 ஆந் திகதி விலைமனுக்களை கோரியதோடு, ரூபா. 85,825 செலவிடப்பட்டு விலைமனுக்களை சமர்ப்பிக்கக்கூடிய தரப்பினர் மட்டுப்படுத்தப்பட்டு செய்தித்தாள் விளம்பரங்கள் வெளியிடப்பட்டன. | எதிர்காலத்தில் இந்த குறைபாட்டை சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | கொள்வனவுச் செயற்பாடுகள் முறையாக நடைபெற வேண்டும். |

### 3.6 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர 31 அன்று 06 பதவிகளிற்காக அனுமதிக்கப்பட்ட 07 உத்தியோகத்தர்களிற்கான வெற்றிடங்கள் காணப்பட்ட நிலையில் அவ் வெற்றிடங்களை பூரணப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை | பதவியணியினர் பற்றாக்குறை தொடர்பாக உள்ளுராட்சி மன்ற திணைக்களத்திற்கு எழுத்துமூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. | பதவியணி வெற்றிடங்களை பூரணப்படுத்த வேண்டும் |

## 4. கணக்களி பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்காக சபைக்காகத் தயாரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட ஆவணத்தின்படி, மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவுகள், வருடத்தின் உண்மையான வருமானம் மற்றும் செலவுகளுடன் ஒப்பிடுகையில், 08 வருமான தலைப்புகளில் 06 வீதத்திலிருந்து 100 வீதம் வரையும், 07 செலவின தலைப்புகளில் 19 வீதத்திலிருந்து 87 வீதம் வரையும் வித்தியாசம் காணப்பட்டது. இதன் பிரகாரம் வரவு செலவுத் திட்ட ஆவணமானது ஆக்கபூர்வமான நிர்வாக முகவராக பயன்படுத்தப்படவில்லை என்பது தெளிவாகின்றது. | இனிவரும் காலங்களில் பாதீட்டை முறையாக தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் | பாதீடு சரியாக தயாரிக்கப்பட்டு அதில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளை நிறைவேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளபப்பட வேண்டும் |